உ
சிவமயம்



கோண்டாவில் கிழக்கைச் சார்ந்தவரும்

திருவாளர் செ. நாகரத்தினம் அவர்களின்

அன்பு மனைவியும்

சைவநெறி தவறு திருநெறியாளரும்

உயர்குடி மரபு வழிவந்தவருமான

# திருவாட்டி பாக்கியம் அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

# *நினைவு மலர்*

9-1-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமதி. பாக்கியம் நாகரத்தினம்

## அவர்கள்



தோற்றம் :
19-09-1911

மறைவு :
10-12-1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திதி வெண்பா

ஆண்டு குரோதனத்துக் கார்த்திகைசீர் பத்தைந்தில்
பூண்டபர பக்கச் சதுர்த்தசியில்—வேண்டிமிக
அம்மையெம் பாக்கியந்தான் ஆனந்தக் கூத்தன்தன்
செம்மலர்த்தாள் சேர்ந்த தினம்.

## ஆசிரியப்பா

பூவிற் றிருக்கும் பூமா மகளொடு
நாவிற் றிருக்கும் நாமகள் சேர்ந்தென
வாழை மாபலா வளர்பைங் கமுகு
தாழை கற்பகத் தருக்களி னீட்டமும்
பாங்கெலாந் தானியப் பயன்தரு நிலங்களும்
தேங்கு காய்கனிச் செய்கைப் பரப்பும்
முதலாம் இயற்கை வளங்க ளோடு
பன்னூற் கல்வி பயின்றுடை யோர்களும்
நன்னூல் ஆய்வு நடாத்து வோர்களும்
ஆங்கிலந் தமிழொடு கற்ற வல்லோர்
அரச சேவையால் ஆற்றிடுஞ் செல்வமும்
இலங்கையின் எல்லாப் பாகமுஞ் சென்று
வர்த்தகத் துறையில் வருபயன் தேக்கமும்
கொண்டுள பெருமை கோண்டாவிற் குரித்து.
இப்பதி தன்னில் இசைபெற வாழ்ந்த
செப்புயர் வேளாண் குடியிற் சிறந்த
சுப்பிர மணியம் தம்பிப் பிள்ளை
என்பான் அவ்வூர் இடமாய்க் கொண்ட
பாக்கியம் என்னும் யோக்கிய வதியள்
செல்லை யாதன் திருமகன் ஆன
நாக ரத்தின நாமத் தோனை
திருமணஞ் செய்து சிறந்த வாழ்வில்
மக்கட் செல்வம் மாண்பில் மல்க
பத்தொ டொன்று பெற்றுய் ஆயினும்
இத்தலம் இருப்போர் எண்ஒன் பதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமக ஞண பத்ம நாதன்
கச்சேரி தன்னில் முதன்மை சிருப்பராக
கடமை ஆற்றும் கண்ணியன் இவனே
இராசலட் சுமியெனும் இனியளை மணந்து
பெற்ற மக்கள் சுகந்தினி சாமினி
செந்தில் ரூபன் அனுசுயா மற்றைச்
செந்தூ ரனொடு செந்திற் குமரன்
என்னும் பேரரை ஏத்தி மகிழ்ந்தாய்
இரண்டாம் மகனும் விவேகா னந்தன்
நகுலாம் பிகையெனும் நங்கையை வரித்தோன்
பாட சாலைக் கட்டிடப் பகுதிப்
பரிசோ தகனய்ப் பதவி வகிப்போன்.
அடுத்து வந்தோன் பூலோக நாதன்
இலங்கை அரசினர் புகையிரதப் பகுதியில்
சிறப்புடன் வாழ்ந்த புகையிரதச் சசரதி
பபா என்னுஞ் செல்லப் பெயரில்
வழங்குறு வள்ளல் இன்றிலை ஆனல்
அவன் மணஞ் செய்த அன்புமனையாள்
ஜெயவதி என்னுஞ் சேயிழை யாளே.
விவசாயத்தோடு வியாபா ரத்திலும்
மேலாம் வெற்றி கண்டோன் ஆன
நான்காம் மகனே குலசே கரனும்
இவனை வீர சிங்கமென் றழைப்பர்
கமலா ஜனிநிகர் விமலா வதியைக்
கடிமணஞ் செய்து கண்ணின் மணிகளாம்
சசீபன் பார்த்திபன் என்ற மக்களை
ஏந்திக் கண்ணில் ஒற்றி மகிழ்ந்திட
இருவரும் பெற்றுத் தந்தனர் மகிழ்ந்தே.
ஐந்தாம் அவனே துரைரா ஜ சேகரம்
யாழ்நகர் தன்னில் சுகாதார இலாகாவில்
மலேரியா தடுப்புப் பகுதியில் மதிக்க
வேலையில் அமர்ந்த மேனேஜன் இவனே.
மகேஸ் வரியெனும் மங்கைநல் லாளை
மணந்து ஹேம ராஜெனும் மகனை
பேரனய்ப் பெற்றுத் தந்தனன் பெரிதே.
சரவண பவானந் தனெனச் சாற்றும்
இவனும் விவசா யத்தில் எழுந்தே
இணையிலாச் செல்வம் ஈட்டி உயர்ந்தோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஷ்ப ராணியாம் பூவையை மணந்து
சுகன்யா கோகுலன் தனுஷா என்னும்
மக்களைப் பேரராய்ப் பெற்றுத் தந்தோன்
ஒன்பது மணியுள் ஒருமணி தனிமணி
என்றே உரைக்க வந்தவள் இவளே
நவரஞ் சிதமெனும் நன்மணி யாவாள்
இவளின் கணவன் சிவதா சனவன்
ஓமான் நாட்டில் உயர்பல் வைத்திய
பகுதியில் வேலை பார்ப்போன் இவர்கள்
சுரேந் திரனொடு நரேஸ் என்னும்
இருவரைப் பேரராய் ஈன்று தந்தனர்
எட்டாம் இடத்தில் இருக்கும் சீரோன்
சச்சிதா னந்தன் ஆவார் இவனே
நல்லூர் அதனில் சிறப்பாய் அமைவுறும்
பலநோக்குக் கூட்டுறவுச் சங்க
முகாமை யாளராய் இருந்து பின்
கனடா சென்று பணிசெய் தாங்குநல்
சிறப்புடன் வாழும் சீரோன் ஆவன்.
கனிஷ்டன் ஆகக் காண்பவன் இவனே
நித்தியா னந்த நாமத் தோனும்
கிறீன்ட்லேஸ் வங்கியில் இருந்தே வாழ்ந்து
பறந்தான் அமெரிக் காவைப் பார்த்து
கறந்து பணத்தைச் சேர்க்கும் காரியன்
இராசேஸ் வரியெனும் இல்லாள் தன்னொடு
பிரியா வாழும் பெருமையன் ஆவன்
இத்தகை வாழ்வில் எழுபதோ டைந்து
ஆண்டுகள் மக்கள் கணவர் மற்றுமுள்ள
பேரர் பேத்தியர் பெருமையில் வாழ்ந்த
இறுதிக் கால யாத்திரை நேரம்
வந்த மக்கள் வெள்ளம் நினது
சொந்தம் பெருமை துலக்கிய தன்றே
பொய்யாம் உலக வாழ்வைப் புரிந்தோ
மெய்யென மேலாம் வீட்டை விருப்பியோ
ஐயா முருகா அரகர முருகா
காப்பாய் என்னைக் கதிர்வே லவனே
என்று முருக நாமம் எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவும் பகலும் இருத்தி நெஞ்சில
நல்லூ ரானை நடந்து வந்தும்
கல்லும் கனியக் கசிந்து கண்ணீர்
சொரியச் சொல்லித் துதித்து வலமாய்
தோத்திரம் பாடி ஆடிக் களிப்பாய்.
ஆறுத லாக அந்த முருகனை
இருக்கவும் விடாமல் இறுகப் பிடிப்பாய்
கன்ம வினையைக் கழித்தவள் போல
அன்னையைக் காணா தழுதிடும் பிள்ளையாய்
என்னே ரமும்வந் தவனைச் சுற்றுவாய்
புனித வதிபோல் பொன்னடி சேர
தனிநின் றவனைத் தாழ்ந்து வணங்குவாய்
என்னே இந்தக் குரோதன ஆண்டு
கார்த்திகைத் திங்கள் செவ்வாய்க் கிழமை
இருபத் தைந்தாம் தேதித் தினத்தில்
வந்த தேய்பிறை சதுர்த்தசித் திதியில்
மாறிலாக் கணவன் மார்பி லடிக்க
அன்புடை மக்கள் அலறித் துடிக்க
துன்பமே உருவாய் மருகர் துவள
சகோதரர் கண்ணீர் தாங்கா துதிர்க்க
உற்றார் நண்பர் உளமிக வருந்த
காலனும் வந்தே கணக்கைப் புரட்ட
தேவ துந்துபி சேர்ந்தே யொலிக்க
விண்ணவர் அனுப்பிய விமானத் திவர்ந்து
கண்ணுதற் கடவுள் கழலடி
திண்ணமாய்ச் சேர்ந்தாய் சிவப்பே றென்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிக் கூற்று

எல்லாம் புவியில் மாருட்டம்
 எண்ணிப் பார்த்தால் சூதாட்டம்
பொல்லா மாயைப் போராட்டம்
 பொருந்தும் பொம்மை ஆட்டமிது
வல்லான் வகுத்த வழியாட்டம்
 வந்து போகும் விதியாட்டம்
நல்லாய்த் தெரிவீர் நாநிலத்தீர்
 நன்கு காண வழிகாண்பீர்

இளமை என்றும் நில்லாது
 ஈட்டும் செல்வம் இருக்காது
வளரும் இந்த ஐம்பூத
 வடிவாம் உடலும் நிற்காது
கிளரும் மனையாள் மக்களுடன்
 கேளிர் பிறவும் நிலைக்காது.
தளரும் போது இறைவனடி
 தானே நிலையாந் துணையாகும்

முடியைச் சூடும் மன்னர்களும்
 மற்று முள்ளோர் எவருங்கைப்
பிடியாய்ச் சாம்ப ராய்வெந்து
 பேசும்பண் ணுவது காண்பீர்
படியின் வாழ்வை யேவிரும்பி
 பாழா, காதீர் எம்பெருமான்
அடியைச் சார்ந்தே உய்ந்திடுவோம்
 அதுவே நமக்காம் அடைக்கலமே.

திருமதி பாக்கியம் — நாகரத்தினம் அவர்களின் ஆன்மா சாந்தியடைவதாகுக.

**ஓம் சாந்தி! சாந்தி!!! சாந்தி!!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தேவாரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிருகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருநாவுக்கரசு நாயனர்

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னி
பொன்மாலை மார்பன்என் புதுநலமுண் டிகழ்வானே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீபோல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் இருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே.

## மாணிக்கவாசக சுவாமிகள்
## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
யீசற்காட் செய்ம்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமா மென்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைமலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருமந்திரம்

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணமென்று பெயரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டுட்டு
நீரினுள் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தர் அலங்காரம்

நாளென் செயும்வினை தானென் செயும் எனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங் குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்னே வந்து தோன்றிடினே.

## கந்தர் அநுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## முருகா !

அகரமு மாகி அதிபனு மாகி
அதிகமு மாகி அகமாகி (முருகா)
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி அவர்மேலாய் (முருகா)
இகரமு மாகி எவைகளு மாகி
இனிமையு மாகி வருவோனே (முருகா)
இருநில மீதில் எளியனும் வாழ
எனதுமு னோடி வரவேணும் (முருகா)
மகபதி யாகி மருவும்வா லாரி
மகிழ்களி கூரும் வடிவோனே (முருகா)
வனமுறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காம முடையோனே (முருகா)
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே (முருகா)
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே. (முருகா)

— அருணகிரிநாதர் திருப்புகழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாம் உன்னுள் அடக்கம்

தரணிதனி லாறுபத் தறுகோடி தீர்த்தமுன்
சரவணந்துன் அடக்கம்
சாற்றுமோ ரெழு கோடி மத்திரங்களு முன்
சடா க்ஷரத்துள் அடக்கம்
விரதமிகு நவகோடி சித்தர்களு முனது சுப
வீக்ஷணந்தனி லடக்கம்
மேலான தேவாலயங்களு முன் ஆறுபடை
வீட்டினிற்குள் அடக்கம்
இரவிமுதல் முப்பத்து முக்கோடி தேவருமுன்
இதய கமலத் தடக்கம்
ஈரேழு புவனமுத லண்டங்கள் பலவுமுன்
னிடத்தினி லடக்கமைபா
வரிசைமிகு பக்தஜன பரிபாலனு மோக
வள்ளி குஞ்சரி மணாளா
வனஜமல ரயன்மதனையருள்சரச கோபால
மருக சரவண முருகனே.

## சண்முகத் தெய்வமணியே

ஒருமையுடனினது திருமலரடிநினைக்கின்ற
உத்தமர்தம்உறவுவேண்டும்
உள்ளொன்றுவைத்துப்புறம்பொன்றுபேசுவார்
உறவுகலவாமைவேண்டும்
பெருமைபெறும்நினதுபுகழ்பேசவேண்டும்பொய்மை
பேசாதிருக்கவேண்டும்
பெருநெறிபிடித்தொழுகவேண்டும்மதமானபேய்
பிடியாதிருக்கவேண்டும்
மருவுபெண்ணாசையைமறக்கவேண்டும்உனை
மறவாதிருக்கவேண்டும்
மதிவேண்டும்நின்கருணைநிதிவேண்டும்நோயற்ற
வாழ்வுநான்வாழவேண்டும்
தருமமிகுசென்னையிற்கந்தர்கோட்டத்துள்வளர்
தலமோங்குகந்தவேளே
தண்முகத்துய்யமணிஉண்முகச்சைவமணி
சண்முகத்தெய்வமணியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல் . . .

எமது குலதெய்வமாகிய

## திருமதி. பாக்கியம் நாகரத்தினம்

அவர்களின் இறுதிச் சடங்குகளிற் கலந்து கொண்டும், இரங்கல் செய்தியனுப்பி அனுதாபந் தெரிவித்தும் இன்னும் பலவேறு உதவி ஒத்துழைப்பு நல்கியும், சபிண்டீகரண வைபவத்திற் கலந்து கொண்டுள்ளோர்க்கும், மலரை குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும், யாத்துத் தந்த ''சேந்தன்'' அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்
9-1-86

இங்ஙனம்
கணவன், மக்கள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org